**செப்டம்பர்- 02**

# TNPSC துளிகள்

- தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் நிகழ்நேர வெள்ள முன்னறிவிப்பு முறையையும் இடம் சார்ந்து முடிவெடுக்கும் ஆதரவு முறையையும் ஆரம்பித்துள்ளது. இது நகர குடியிருப்பாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட வெள்ள முன்னறிவிப்பையும் தங்கள் பகுதிகளில் வெள்ளத்தில் மூழ்குவதற்கான வாய்ப்புடைய பகுதிகளையும் பற்றித் தகவல் கொடுக்கும்.
- இந்திய ஆட்சிப் பணி அதிகாரியான பினய் குமார் இந்திய அரசின் எஃகுத்துறை அமைச்சகத்தின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- கேரள மாநில அரசு கடுமையான வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தனது மாநிலத்தை மீள்கட்டமைப்பதில் திட்ட ஆலோசனை பங்குதாரராக KPMG என்ற உலகில் மிகப்பெரிய நிபுணத்துவம் கொண்ட சேவை நிறுவனத்தை பணியமர்த்த முடிவு செய்துள்ளது.
- 2018-19ம் ஆண்டிற்கான இந்திய வங்கிகள் சங்கத்தின் புதிய தலைவராக பஞ்சாப் தேசிய வங்கியின் மேலாண்மை இயக்குநரும் தலைமை செயல் அதிகாரியுமான சுனில் மேத்தா நியமிக்கப்பட்டுள்ளார்.
- ஒடிசா மாநில அரசு மலேரியாவைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அதை ஒழிப்பதற்காக ஒரு வலுவான திட்டப்பாதையையும் வகுப்பதற்காக "மலேரியா ஒழிப்பு அறக்கட்டளை" (Malaria Elimination Trust) என்ற நிறுவனத்துடனும் அமெரிக்காவைச் சேர்ந்த "மலேரியா இனி இல்லை" (Malaria No More) என்ற நிறுவனத்துடனும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்திய அஞ்சலக வங்கிச் சேவை நிறுவனத்தின் புதிய மேலாண் இயக்குநர் மற்றும் தலைமை செயல் அதிகாரியாக வோடபோன் M-Pesa நிறுவனத்தின் முன்னாள் மேலாண் இயக்குநர் சுரேஷ் சேத்தி நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஜனவரி 2017 முதல் இந்திய அஞ்சலக வங்கிச் சேவை நிறுவனத்தின் இடைக்கால மேலாண் இயக்குநர் மற்றும் தலைமை செயல் அதிகாரியாக இருந்த A.P. சிங் என்பவருக்குப் பதிலாக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்திய மற்றும் நேபாள பிரதமர் ஆகியோர் கூட்டாக இணைந்து 400 படுக்கைகள் கொண்ட நேபாள-பாரத மைத்ரி பசுபதி தர்மசாலை என்ற ஓய்வு இல்லத்தை துவக்கி வைத்தனர். இந்த ஓய்வு இல்லம் காத்மண்டுவில் இந்தியாவின் உதவியுடன் யாத்ரீகர்களுக்காக கட்டப்பட்டதாகும்.
- மத்திய உள்துறை அமைச்சகம் சுதந்திர இந்தியாவில் முதல்முறையாக 2021ம் ஆண்டில் சென்சஸ் அறிக்கையில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படும் என அறிவித்துள்ளது.
  - கடைசியாக ஜாதித் தகவல்களை 1931ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்போது சேகரித்ததன் அடிப்படையில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு மண்டல் குழுவின் பரிந்துரைகளின்படி 27 சதவிகித இடஒதுக்கீடு அளிக்கப்பட்டு 26 வருடங்களுக்குப் பிறகு இம்முறை அறிவிக்கப்பட்டுள்ளது.
- மத்திய ரிசர்வ் வங்கியானது அடுத்த அறிவிப்பு வரும்வரை அதன் தலைமை நிர்வாக அதிகாரியான ரானா கபூரை மறுநியமனம் செய்துள்ளது. ரானா காபூரின் பதவிக்

காலமானது செப்டம்பர் 1 உடன் முடிவடையவிருந்தது.

- ❖ மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் தேசிய மருத்துவசார் தாவரங்களின் மன்றத்தின் 7-வது கூட்டமானது மத்திய ஆயுஷ் அமைச்சரின் தலைமையில் புதுதில்லியில் நடைபெற்றது (NMPB – National Medicinal Plant Board).
- ❖ காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் கபில் சிபல் தாம் எழுதிய "உண்மையின் நிழல்கள் : தடம்புரண்ட பயணம்" என்ற புத்தகத்தை வெளியிடவிருக்கிறார்.
- ❖ வாஷிங்டன் D.C.யில் உள்ள பாராளுமன்ற நூலகத்தில் தனது கவிதைகளை பதிவு செய்வதற்காக முதலாவது இந்தியக் கவிஞராக K. அபே அழைக்கப்பட்டுள்ளார். கவிஞர் மற்றும் கவிதை என்ற தொடரை கவிஞர் கிரேஸ் கவாலியேரி நடத்தினார்.
- ❖ பாதுகாப்பு பொதுத்துறை நிறுவனமான ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராக R. மாதவன் பொறுப்பேற்றார். இதற்குமுன் T. சுவர்ணா ராஜு அப்பொறுப்பு வகித்தார்.
- ❖ 2018 ஆம் ஆண்டு அக்டோபர் 3 ஆம் தேதி இந்தியாவின் புதிய தலைமை நீதிபதியாக ரஞ்சன் கோகாய் பொறுப்பேற்க உள்ளார். இவரது பெயர் மத்திய அரசாங்கத்திற்கு தற்போதைய தலைமை நீதிபதியான தீபக் மிஸ்ராவால் பரிந்துரைக்கப்பட்டது.
- ❖ செப்டம்பர் 1 முதல் செப்டம்பர் 4 வரை முதலாவது சர்வதேச கோ கோ சாம்பியன்ஷிப் போட்டி இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது.
- ❖ மும்பை சத்ரபதி சிவாஜி சர்வதேச விமான நிலையமானது சத்ரபதி சிவாஜி 'மகாராஜ்' சர்வதேச விமான நிலையம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## இந்திய அஞ்சலக வங்கிச் சேவை

- ❖ 2018-ம் ஆண்டு செப்டம்பர் 1-ம் தேதி பிரதமர் இந்திய அஞ்சலக வங்கிச் சேவையை துவக்கி வைத்தார்.
- ❖ இந்த அஞ்சலக வங்கிச் சேவையின் மூலம் வங்கிச் சேவைகள் நாட்டின் தொலைத் தூரப்பகுதிகளுக்கும் அங்கு வசிக்கும் மக்களுக்கும் அவர்கள் வசதிக்கேற்ப சென்றடையும். இவ்வங்கி அஞ்சல் அலுவலகங்கள் வழியாகவும், கிராமப்புற அஞ்சல் பணியாளர்கள் மூலமாகவும் சேவைகளை அளிக்கும்.
- ❖ ஜன்தன் யோஜனாவின் நோக்கத்தை நிறைவேற்றுவதில் இந்திய அஞ்சலக வங்கிச் சேவை மேலும் ஒரு படியாகும்.

## தேசிய ஊட்டச்சத்து வாரம் – செப்டம்பர் 1 முதல் 7

- ❖ நாடு முழுவதும் தேசிய ஊட்டச்சத்து வாரம் செப்டம்பர் 1 முதல் செப்டம்பர் 7 வரை அனுசரிக்கப்படும்.
- ❖ மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகத்தின் உணவு மற்றும் ஊட்டச்சத்து மன்றம் இவ்வாரத்தை நடத்துகிறது.




- ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்படும் இந்நிகழ்ச்சியின் நோக்கம் வளர்ச்சி, உற்பத்தித் திறன், பொருளாதார வளர்ச்சி மற்றும் தேசிய வளர்ச்சி ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தும் சுகாதாரத்தின் ஊட்டச்சத்தின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதாகும்.
- தேசிய ஊட்டச்சத்து வாரம் 2018-ன் கருத்துருவானது 'உணவுடன் இன்னும் செல்' என்பதாகும். இதன் 2017 ஆம் ஆண்டின் கருத்துருவானது 'உகந்த குழந்தை மற்றும் இளம் குழந்தைகளுக்கான உணவூட்டல் முறைகள் : ஆரோக்கியமான குழந்தை" என்பதாகும்.

# சர்வதேசச் செய்திகள்

## இந்தியா மற்றும் நேபாளத்திற்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

- நேபாளத்தில் நடைபெற்ற 4-வது பீம்ஸ்டெக் உச்சி மாநாட்டின் ஒரு பகுதியில் பீகாரின் ரக்சுல் நகரத்திற்கும் காத்மண்டுவிற்கும் இடையே ஒரு யுக்திசார்ந்த இரயில்வே பாதையை கட்டமைக்க இந்தியாவும் நேபாளமும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- இந்த இரயில் பாதை இரு நாடுகளுக்குமிடையேயான இணைப்பை அதிகப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது இரு நாட்டிற்குமிடையேயான மக்களுக்கு இடைப்பட்ட தொடர்பை அதிகப்படுத்திடவும் பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிக்கவும் எண்ணுகிறது.
- தவிர மேலும் 3 இரயில்பாதைத் திட்டங்கள் பட்டியலில் உள்ளன. அவை புதிய ஜல்பைகுரி-காகர்பிட்டா, நௌகான்வா – பாயிராஹவா மற்றும் நேபாள்கஞ்ச் சாலை-நேபாள்கஞ்ச் ஆகியனவாகும்.


## சர்வதேச ஆயுர்வேத காங்கிரஸ்

- நெதர்லாந்தில் நான்காவது சர்வதேச ஆயுர்வேத காங்கிரஸ் மாநாட்டை மத்திய ஆயுஷ் அமைச்சகம் துவக்கி வைத்தது.
- இம்மாநாடு நெதர்லாந்திலும் அதைச் சுற்றியுள்ள ஐரோப்பிய நாடுகளிலும் ஆயுர்வேதத்தை விளம்பரப்படுத்திட உதவும்.
- இம்மாநாடு நெதர்லாந்தில் உள்ள சர்வதேச மகரிஷி ஆயுர்வேத நிறுவனம்,

புதுதில்லியில் உள்ள அகில இந்திய ஆயுர்வேத காங்கிரஸ், புனேவில் உள்ள சர்வதேச ஆயுர்வேத நிறுவனம், நெதர்லாந்தில் உள்ள இந்திய தூதரகத்துடன் இணைந்து நடத்தப்பட்டது.

## சிந்து நதிநீர் ஒப்பந்தத்தின் 115வது கூட்டம்

- பாகிஸ்தானில் உள்ள லாகூரில் இந்தியா-பாகிஸ்தானுக்கிடையேயான நிரந்தர சிந்துநதி ஆணையத்தின் 115வது சந்திப்பு நடந்தது.
- இச்சந்திப்பில் சிந்துநதி ஒப்பந்த விதிகளின்படி, ஜம்மு-காஷ்மீரில் நிறைவேற்றப்படும் நீர்மின் திட்டங்களான பகல்துல் (1000 மெகாவாட்) மற்றும் கீழ் கல்னாய் (48 மெகாவாட்) ஆகிய திட்டங்களின் மீதான தொழில்நுட்ப விவாதங்கள் நிகழ்த்தப்பட்டன.




- இருநாடுகளின் ஒப்பந்தத்தின்படி இருதரப்பு சிந்துநதி ஆணையர்களும் இரு நாடுகளிலும் உள்ள சிந்து நதிப்படுகையில் சுற்றுப்பயணம் மேற்கொள்வதற்கு ஒப்புக் கொண்டன.

## சீனா-மாலத்தீவுகள் நட்புப் பாலம்

- மாலத்தீவுகளின் முதலாவது கடலின் குறுக்கே கட்டப்பட்ட பாலமான சீனா-மாலத்தீவுகள் நட்புப்பாலம் போக்குவரத்திற்காக திறந்துவிடப்பட்டது. இப்பாலம் மாலத்தீவுகளின் தலைநகரமான மாலேவை அதன் அண்டைப் பகுதியான ஹுல்ஹுலே தீவுடன் இணைக்கும்.




- 21வது நூற்றாண்டிற்கான கடல்சார் பட்டுவழிப் பாதையை நிறுவுவதில் இது மாலத்தீவுகள் மற்றும் சீனா ஆகிய நாடுகளின் வரலாற்றுச் சிறப்புமிக்கத் திட்டமாகும்.

# மாநிலச் செய்திகள்

## PUDA - 360

- பஞ்சாப் முதலமைச்சர் கேப்டன் அமரீந்தர் சிங் இணைய வாயிலான, சொத்துக்கள் விற்பனைக்காக மின்னணு-சொத்துக்கள் (e-Properties) வடிவத்திலான PUDA 360 என்ற வசதியை வெளியிட்டார்.
- இது பஞ்சாப் நகரத் திட்டமிடல் மற்றும் வளர்ச்சி ஆணையத்தில் (Punjab Urban Planning and Development Authority – PUDA) மிகுந்த திறனையும், வெளிப்படைத் தன்மையையும் ஏற்படுத்தும்.
- இந்த நேரடி நடைமுறை இணையதள ஏல முறையை மிகுந்த திறனுடையதாகவும், வீடு கட்டுபவர்கள்/கட்டிடவியலாளர்கள்/தனிநபர்கள் ஆகியோருக்கு தங்கள் திட்டங்கள்/சொத்துக்கள் பற்றி இணையதளத்தில் விளம்பரம் செய்ய ஒரு பொதுவான நடைமுறையை ஏற்படுத்தும்.
- மேலும் இது கட்டிடங்களுக்கு ஒப்புதல் அளித்தல், வில்லங்கச் சான்றிதழ் அளித்தல், பயணப்படி சான்றிதழ் அளித்தல் மற்றும் சொத்து பரிமாற்றம் ஆகியவற்றில் ஏற்படும் தாமதங்களைத் தடுத்திடவும் உதவிடும்.

## மில் பன்ச்சே மத்திய பிரதேசம்

- மத்திய பிரதேச மாநில அரசானது பெரும் எண்ணிக்கையிலான கற்பிக்கும் திட்டமான 'மில் பன்ச்சே மத்தியப் பிரதேசம்' (குழுவாக படித்தல், மத்தியப் பிரதேசம்) என்னும் திட்டத்தை நடத்தியது.
- கல்வியின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

- ❖ இத்திட்டத்தின் மூலம் சமூகத்தில் உள்ள பல்வேறு பிரிவுகளிலிருந்து (மக்கள் பிரதிநிதிகள், ஊக்கப்படுத்துவோர்) மக்கள் தன்னார்வலர்களாக பங்கேற்க முடியும். மேலும் இதன் மூலம் மாணவர்களை ஊக்கப்படுத்த அறிவுசார்ந்த புத்தகங்களை படிக்கலாம்.

# விளையாட்டுச் செய்திகள்

## மிகவும் சிறந்த விளையாட்டு வீரர்

- ❖ ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் சிறந்த விளையாட்டு வீரராக முதலாவது பெண் தடகள வீரரான ஜப்பானிய நீச்சல் வீராங்கனை ரிகாகே இக்கி உருவெடுத்துள்ளார்.
- ❖ இவர் 6 தங்கம் மற்றும் 2 வெள்ளி பதக்கங்களை வென்றுள்ளார். இவர் ரூ.50,000 பரிசுத் தொகையை பெற்றுள்ளார்.



- ❖ இதற்குமுன் 1982 ஆம் ஆண்டில் புதுதில்லியில் வடகொரியாவின் துப்பாக்கி சுடுதல் வீரரான சோ கின்-மேன் 7 தங்கப் பதக்கங்கள் மற்றும் 1 வெள்ளிப் பதக்கம் வென்றதே சாதனையாக இருந்தது.

## 6000 டெஸ்ட் ரன்களை வேகமாக எட்டிய இரண்டாவது இந்திய வீரர்

- ❖ டெஸ்ட் போட்டிகளில் 6000 ரன்களை வேகமாக எட்டிய இரண்டாவது இந்திய வீரராக விராட் கோலி உருவெடுத்துள்ளார்.
- ❖ சச்சின் டெண்டுல்கர் (120) மற்றும் விவியன் ரிச்சர்ட்ஸ் (120) ஆகியோரை விட வேகமாக 119 இன்னிங்ஸில் இச்சாதனையை கோலி நிகழ்த்தியுள்ளார்.



- எனினும் சுனில் கவாஸ்கர் 117-ல் இன்னிங்ஸ்சில் 6000 ரன்களை எட்டினார்.

- - - - - - - - -